**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

************

**ஊடக அறிக்கை**

## இந்திய பிரஜைகளுடன் முதலாவது விசேட விமானம் கொழும்பிலிருந்து புறப்பட்டது

இலங்கையில் சிக்கியிருந்த இந்திய பிரஜைகள் 176 பேருடன் முதலாவது விசேட விமானமான ஏர்இந்தியாவிமானசேவையின்AI 0276 இன்று கொழும்பிலிருந்து மும்பை, புபனேஸ்வர் மற்றும் கல்கத்தா ஆகிய நகரங்களை நோக்கி புறப்பட்டது . கொவிட்19 நோய் காரணமாக உலகளாவிய ரீதியில் சிக்கியிருக்கும் இந்திய பிரஜைகளை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்காக இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மிகவும் பாரிய மீட்பு நடவடிக்கையான “வந்தே பாரத்” நோக்கின்கீழ் இந்த விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லேஅவர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இந்திய பயணிகளுடன் உரையாடியதுடன் அவர்களின் பாதுகாப்பான பயணத்திற்காக வாழ்த்துக்களையும் பகிர்ந்திருந் தார். இந்நிலையில் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் வீடுநோக்கிய இந்தபயணம் தொடர்பாகவும் இந்தியா வை சென்றடைந்ததும் பின்பற்றவேண்டிய சுகாதார நெறிமுறைகள் குறித்தும் விளக்கமளித்திருந்தனர். மகிழ்ச்சியுடன் வீடுதிரும்பும் இப்பயணிகள் இந்தியாவுக்கான விமானத்தில் ஏறுவதற்கு முன்னதாக இரு அரசாங்கங்களுக்கும் நன்றிகளை தெரிவித்திருந்தனர்.

3. இலங்கையில் சிக்கியிருந்த இந்திய பிர ஜைகளை தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை அரசாங்கத்திற்கு

இந்திய உயர்ஸ்தானிகர் நன்றி தெரிவித்துள்ளார். சிவில் விமான சேவை அமைச்சு, சுகாதார மற்றும் குடும்ப நலன்புரி அமைச்சு, உலகளாவிய ரீதியில் இருக்கும்இந்தியஇராஜதந்திர மற்றும்கொன்சியூலர்அலுவலகங்கள் அத்துடன் இந்தியாவில் உள்ள மாநில அரசாங்கங்கள் ஆகியவற்றின்கூட்டு முயற்சியாக இந்த "வந்தே பாரத் நோக்கு" முன்னெடுக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்தியாவிலிருந்து ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்களை சொந்த நாட்டிற்கு அழைத்து வருவதில் இந்திய அரசாங்கம் வழங்கிய உதவிகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்த உயர் ஸ்தானிகர், கொவிட்19 நோய் காரணமாக இந்தியாவில் சிக்கியிருக்கும் சகல இலங்கையர்களையும் சொந்த நாட்டிற்கு அழைத்துவருவதற்கான சகல சாத்தியமான உதவிகளையும் வழங்குவதில் இந்தியாவின் தொடர்ச்சியான ஈடுபாட்டினையும் மீளஉறுதிப்படுத்தியிருந்தார்.

4. இந்திய பிரஜைகளை சொந்தநாட்டுக்கு அழைத்துச் செல்லும் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக இந்திய கடற்படை கப்பலான ஐஎன்எஸ் ஜலஷ்வா2020 ஜூன் மாதம் முதலாம் திகதி கொழும்பிலிருந்து தூத்துக்குடியை நோக்கி பயணிக்கவுள்ளது. இந்த கப்பலில் கிட்டத்தட்ட 700 இந்திய பிரஜைகள் பயணிக்கவுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த பயணத்துக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வந்தே பாரத் நோக்கின்கீழ் வெளிநாடுகளில் சிக்கியிருக்கும் இந்தியர்களை திருப்பி அழைத்து வருவதற்காக இந்திய கடற்படை கப்பல்களின் சேவையான "சமுத்ர சேது" திட்டத்தின்கீழ் இந்த கப்பல் பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

5. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இந்த கப்பலிற்கான பயணிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் சிக்குண்டிருப்பவர்களுக்காக இந்திய உள்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டுமுறைமையின் பிரகாரம், அவசரமாக நாடு திரும்ப

வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு , குறிப்பாக நிர்க்கதியாகியுள்ள குடிபெயர் தொழிலாளர்கள், விசா காலாவதியான நிலையில் தங்கியிருப்பவர்கள் , மருத்துவ உதவிகள் தேவைப்படுவோர் , கர்ப்பிணிகள், பெண்கள், முதியவர்கள், குடும்ப உறுப்பினரின் மரணத்தை தொடர்ந்து உடனடியாக இந்தியா திரும்புவதற்கு கோரிக்கைகளை முன் வைத்திருப்போர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட தரப்பின ருக்கு, இப்பயணத்தில்முன்னுரிமைவழங்கப்படுகிறது.

6. நாடுதிரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும்இந்தியர்கள் இதுவரையில் தம்மை இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்ய தவ றியிருப்பின் கீழ்வரும் இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள்https://hcicolombo.gov.in/COVID_helpline நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய பிரஜைகள் பொறுமையைப்பேணுமாறும், இந்திய உயர் ஸ்தானிக ராலயத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் அறிவித்தல்களை அறிந்து கொள்ளுமாறு ம் நாம் கோரிக்கைவிடுக்கின்றோம்.

****

கொழும்பு

29 மே 2020